**5410**

Register Number | | | | | | |

# தமிழ் — இரண்டாம் தாள்

நேரம் : $2\frac{1}{2}$ மணி ] [ மொத்த மதிப்பெண்கள் : 100

*குறிப்பு :* i) விடைகள் தெளிவாகவும், குறித்த அளவினதாகவும் அமைதல் வேண்டும்.
ii) முகவுரை, பொருளுரை மற்றும் முடிவுரை என்ற அமைப்பில் கட்டுரை அமைதல் வேண்டும்.

I. பின்வரும் தலைப்புகளில் ஏதேனும் **ஒன்று** பற்றி இரு பக்கங்களில் கட்டுரை வரைக. 1 × 10 =10

1. பசுவின் செயலும் கதை உணர்த்தும் நீதியும்
2. 'பெத்த மனம் பித்து பிள்ளைமனம் கல்லு' என்ற பழமொழியைக் 'காய்ச்ச மரம்' கதை கொண்டு விளக்குக.
3. 'அப்பாவு கணக்கில் 35 ரூபாய்'

II. பின்வருவனவற்றுள் ஏதேனும் **ஒன்று** பற்றிக் கடிதம் வரைக. 1 × 10 = 10

(*குறிப்பு :* கடிதத்தில் கையொப்பமிடும் இடத்தில் 'X' என்று குறிப்பிடவும். பெயரோ, பதிவு எண்ணோ அல்லது முகவரியோ எழுதினால் விடைத்தாள் மதிப்பீடு செய்யப்பட மாட்டாது.)

4. நும் குடியிருப்புப் பகுதியில் உள்ள பழுதுபட்ட சாலைகளைச் சீரமைக்க வேண்டி நகராட்சி ஆணையருக்குக் கடிதம் ஒன்று எழுதுக.
5. அண்மையில் நீ கண்டு களித்த அறிவியல் கண்காட்சி குறித்து நண்பனுக்கு ஒரு கடிதம் எழுதுக.
6. மிதிவண்டி களவுபோனது குறித்துக் காவல்துறை ஆய்வாளர் அவர்களுக்கு ஒரு புகார்க் கடிதம் எழுதுக.

III. 7. கீழ்க்காணும் பாடலைப் படித்து பின்வரும் **ஐந்து** வினாக்களுக்கு விடை தருக. 5 × 2 = 10

எப்படியும் வாழ்வதுதான் வாழ்க்கை என்றே
எண்ணுபவன் பொறுப்பற்ற மனிதனாவான்
இப்படித்தான் நாம் வாழ வேண்டுமென்றே
எண்ணுபவன் சமூகத்தில் உயர்ந்தோ னாவான்
உப்பாக இருந்தாலும் நீரா னாலும்
உபயோகப் படுத்துவதில் அளவு வேண்டும்
அப்படி நாம் அளவறிந்து பயன்படுத்தும்
அதன்பெயரே சிக்கனமாம் அறிந்து கொள்வீர்.

*வினாக்கள் :*

i) பொறுப்பற்ற மனிதன் யார் ?
ii) சமூகத்தில் உயர விரும்புபவன் எண்ணம் எப்படி அமைய வேண்டும் ?
iii) பொருள்களை உபயோகப்படுத்துவதில் என்ன வேண்டும் ?
iv) சிக்கனம் என்று எதற்கு பெயர் ?
v) இப்பாடலுக்கு ஏற்ற தலைப்பினை எழுதுக.

[ Turn over

IV. 8. கீழ்க்காணும் உரைநடையை *மூன்றில் ஒரு பங்காகச் சுருக்கி* எழுதுக : 1 × 10 = 10

புதிதாகப் பழகும்போது பெரும்பாலோர் நன்றாகப் பழக முடியும். அதில் ஒன்றும் சிறப்பு இல்லை. திறமை இல்லை. புதிய மாணவர் ஒழுங்காக நடந்து கொள்வர். புதிய ஆசிரியர் பாடுபட்டுக் கற்றுக்கொடுப்பார். புதிய வியாபாரி நல்ல சரக்கு விற்பார். புதிய வேலைக்காரி நன்றாக உழைப்பாள். புதிய பால்காரன் நல்ல பால் தருவான். புதிய நட்பும் இனிமையாக விளங்கும். அதில் ஒரு சிறப்பும் இல்லை. இந்தப் புதுமையை எள்ளி நகையாடுவது போல் 'புதிய துடைப்பம் நன்றாகப் பெருக்கும்' என்ற ஆங்கிலப் பழமொழி வேடிக்கையாக இருந்தாலும் கருத்து உடையதுதான். அதற்கு மாறாக எவ்வளவு பழமையான போதிலும் சிறப்புக் குன்றாமல் ஒளிவிடும் வாழ்க்கைதான் நல்ல வாழ்க்கை. மற்றையது பொன்முலாம் பூசியதுபோல் தொடக்கத்தில் மட்டுமே நல்ல ஒளிவீசும். உண்மையான பொன்னால் செய்யப்பட்ட பொருள் பழகப் பழக, தேயத் தேய குன்றா ஒளி வீசும் அல்லவா ? அது போல வாழும் வாழ்க்கையே நல்லவர்களின் குறிக்கோளாக இருத்தல் வேண்டும்.

V. பின்வரும் வினாக்களுக்கு விடை தருக :

9. முல்லைத் திணைக்குரிய முதற்பொருளை எழுதுக. 1 × 2 = 2

*அல்லது*

நெய்தல் திணைக்குரிய கருப்பொருள்களுள் நான்கினை எழுதுக.

10. புறத்திணைகள் எத்தனை வகைப்படும் ? அவை யாவை ? 1 × 2 = 2

*அல்லது*

பாடாண் திணையை விளக்குக.

11. வெண்பா எத்தனை வகைப்படும் ? அதன் வகைகளைக் குறிப்பிட்டு எழுதுக. 1 × 2 = 2

*அல்லது*

நேரிசையாசிரியப்பாவைச் - சான்றுடன் எழுதுக.

12. கீழ்க்காணும் குறளை அலகிட்டு வாய்பாடு கூறுக : 1 × 2 = 2

உரைப்பார் உரைப்பவை எல்லாம் இரப்பார்கொன்

றீவார்மேல் நிற்கும் புகழ்

13. கீழ்க்காணும் சொற்களில் எவையேனும் இரண்டனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக : 2 × 2 = 4

i) தீண்டினார் ii) உயர்ந்து

iii) கண்டனன் iv) வாழ்க.

14. கீழ்க்காணும் சொற்களில் எவையேனும் **இரண்டனுக்கு** இலக்கணக் குறிப்பு தருக: $2 \times 2 = 4$

i) நீள்புகழ் ii) எந்தை

iii) வெண்சாமரை iv) உவகைத்தேன்.

15. கீழ்க்காணும் சொற்களில் எவையேனும் **இரண்டனுக்குப்** புணர்ச்சி இலக்கணம் தருக: $2 \times 2 = 4$

i) நாடெலாம் ii) தென்மேற்கு

iii) பாசிலை iv) மரச்சட்டம்.

16. கீழ்க்காணும் இரு வினைமுற்றுகளில் ஏதேனும் **ஒன்றனுக்குத்** தொழிற்பெயர் எழுதுக : $1 \times 2 = 2$

i) இரந்தார் ii) வாழ்ந்தவர்.

17. தற்குறிப்பேற்ற அணியை எடுத்துக்காட்டுடன் விளக்குக. $1 \times 4 = 4$

*அல்லது*

உள்ளம் உடைமை உடைமை பொருளுடைமை

நில்லாது நீங்கி விடும் - இக்குறளில் பயின்று வரும் அணியைச் சுட்டி விளக்குக.

18. கீழ்க்காண்பவற்றில் ஏதேனும் **ஒன்றனுக்கு** விடை தருக : $1 \times 2 = 2$

ஐகாரக் குறுக்கம் என்றால் என்ன ? சான்றுடன் விளக்குக.

*அல்லது*

மொழி எத்தனை வகைப்படும் ? அவை யாவை ?

19. கீழ்க்காண்பவற்றில் ஏதேனும் **ஒன்றனுக்கு** விடை தருக : $1 \times 2 = 2$

திணை வழுவமைதி என்றால் என்ன ?

*அல்லது*

இரட்டைக் கிளவியை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

VI. 20. கீழ்க்காணும் உரைநடையைப் படித்துத் தகுந்த நிறுத்தற் குறியிடுக : $1 \times 2 = 2$

இளங்கோ எழுதிய கண்ணகியின் காவியத்தைப் படி பல முறைப் படி என்றும் படி கியூரி அம்மையாரின் வரலாற்றையும் கஸ்தூரிபா காந்தியின் வரலாற்றையும் திரும்பத் திரும்பப் படி

[ Turn over

21. கீழ்க்காணும் சொற்களில் இரண்டனுக்கு திருந்திய சொற்களை எழுதுக : 2 × 1 = 2

i) சிகப்பு ii) தாவாரம்

iii) குடக்கூலி iv) ஊரணி.

22. கீழ்க்காணும் சொற்களில் இரண்டினைப் பிரித்து எழுதுக : 2 × 1 = 2

i) அரவணை ii) வெண்குடை

iii) தன்னரிய iv) வேண்டாக்குப்பை.

23. கீழ்க்காணும் தொடர்களில் உள்ள எழுத்துப்பிழைகளைத் திருத்தி எழுதுக : 3 × 2 = 6

i) பறுவத்தே பயிற் செய்

ii) உல்லங்கை நெள்ளிக்கனி

iii) இணம் இணத்தோடு சேரும்.

24. கீழ்க்காணும் வேற்றுமொழிச் சொற்களுக்குத் தனித்தமிழ்ச் சொற்களை எழுதுக : 2 × 1 = 2

i) ஜில்லா ii) பஜனை.

25. கீழ்க்காணும் தொடரைச் செய்தி வாக்கியமாக மாற்றுக : 1 × 2 = 2

வைகறைத் துயிலெழு

26. கீழ்க்காணும் தொடரிலுள்ள சந்திப்பிழைகளை நீக்குக : 1 × 2 = 2

அந்த காலத்தில் சிதம்பரனாரது சொற்பொழிவு இல்லாத கூட்டத்தை காண்பதரிது.

27. கீழ்க்காணும் தொடரை வினாத்தொடராக மாற்றுக : 1 × 2 = 2

சாத்தனார் வள்ளுவர் வழி நிற்பவர்.

VII. 28. கீழ்க்காணும் ஆங்கிலத் தொடர்களைத் தமிழில் மொழிமாற்றம் செய்க : 1 × 4 = 4

Trees are useful to us. They give us timber and firewood. The timber is used to make furniture. Leaves and fruits of some trees are used to prepare medicine.

29. கீழ்க்காணும் மரபுத்தொடர்கள் அல்லது பழமொழிகளில் எவையேனும் **மூன்றனைத்** தமிழில் மொழிபெயர்க்க : 3 × 2 = 6

i) Self help is the best help

ii) Distance lends enchantment to the view

iii) Money makes many things

iv) Penny saved is a penny gained

v) Blood is thicker than water.